(இ) ஆம் எனில், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) நாகவேடு கிராமத்தில் 640.77 ஏக்கரா பரப்பளவுள்ள நன்செய் நிலங்களுக்கு 3,174.47 ரூபாய் அளவில் பருவகாலத் தீர்வைத் தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளது.

புறம்போக்கு நிலங்கள்

***557 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பூத்துறை, திருச்சிற்றம்பலம், இரும்பை முதலான பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைத் தனி நபர்களுக்கோ, மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த அரவிந்து ஆசிரமத்திற்கோ அதன் கிளை ஸ்தாபனங்களுக்கோ பட்டா மாற்றம் செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் சங்கம் "அரோவில்லே" என்னும் நகரை அமைப்பதற்காக, தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுகாவில், பூத்துறை கிராமத்தில் உள்ள தீர்வை விதிக்கப்படாத 41 ஏக்கர் தரிசு நிலங்களுடன் திருச்சிற்றம்பலம், இரும்பை, பாட்டனூர் கிராமங்களில் உள்ள 219.76 ஏக்கர் நிலங்களையும் பட்டா செய்து தருமாறு வேண்டியுள்ளது. இந்த நிலங்களைப் பட்டாசெய்து தரும்படி வேறு எவரிடமிருந்தும் விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு தடவை பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்ட புறம்போக்கு நிலங்களை சர்க்காரேகூட எடுத்துக்கொள்ளுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்று பஞ்சாயத்து ஆக்ட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களை மறுபடியும் தனி நபருக்குப் பட்டா செய்துகொடுக்கவேண்டுமென்ற யோசனை வந்து, அதற்கு எதிராகப் பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருந்தும், தனி நபருக்குப் பட்டா செய்துகொடுப்பதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பஞ்சாயத்து ஆக்ட் பற்றி கேட்ட விவரத்திற்கு நான் பதில் சொல்ல முடியவில்லை. இப்பொழுது ஆசிரமத்தினுடைய டவுன்ஷிப் அமைப்பதற்காக அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருக்கிறது. கனம் அங்கத்தினரும் ஆட்சேபணை சொல்லுகிறார்கள். இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

9th November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, may I give a little more information on that point ?

அங்கே இருக்கக் கூடிய அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு இண்டஸ்ட்ரியல் டவுன்ஷிப் வைக்க முன் வந்திருக்கிறார்கள். பிரஞ்சு சர்க்காருடைய ஒத்துழைப்புக்கொண்டு இதை ஏற்படுத்த இருக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் நல்ல தொழில் வளம் ஏற்படும் என்று நினைக்கிறேன். ஆகவே தான், இந்த மனையை ஒதுக்கவேண்டும் என்பதாக இண்டஸ்ட்ரீஸ் இலாகாவுக்கு அப்ளை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தொழில் இலாக்கா பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் தொழில்பேட்டையை நிறுவ அரவிந்த ஆச்ரமமே அக்கறை காட்டுகிறதா ? அல்லது புதுச்சேரி சர்க்காரும் சேர்ந்து அக்கறை காட்டுகிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரவிந்த ஆசிரமமேதான் அக்கறை காட்டுகிறது. இவர்களுக்குத்தான் பிரஞ்சு நாட்டு உதவி, பணம் எல்லாம் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அப்படியானால் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்த அரசாங்கத்திற்கு அபிப்பிராயம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எனக்குத் தெரியாது.

நகைத்தொழிலாளர்கள்

* 558 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட நகைத் தொழிலாளர்களிடமிருந்து குடியிருப்பு நிலம் கோரி 1—10—1965-லிருந்து எத்தனை மனுக்கள் வந்துள்ளன ஜில்லாவாரியாக.

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

(உ) எத்தனை நகைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது ?

(எ) அவசியமான இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்து வழங்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (d) A statement a is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்களில் இருந்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்து மட்டும் 383 மனுக்கள் வந்திருக்கிறதாக தெரிகிறது. செங்கல் பட்டில் 40 மனுக்கள் வந்திருக்கின்றன. முப்பத்தாறுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால் கோயம்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய

a Printed as a Appendix VI on pages 899-903.